https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# வாலி-இராமன் பார்வையில் அறம் : மாற்றங்களும் காரணங்களும்

**ம. சேதுமாதவன்**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் – 641029

## முன்னுரை

திருமாலின் பத்து அவதாரங்களில் ஏழாவதாக இராம அவதாரம் அமைகின்றது. வால்மீகி இராமாயணம் இராமனின் ஆதி முதல் அந்தம் வரையிலான செய்திகளைப் படம்பிடித்துக் காட்டுகிறது. இதனைக் 'கல்வியில் பெரியவன்' என்று அழைக்கப்படுகின்ற கம்பன் தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்றவாறு தமிழில் தழுவலாகப் படைத்து இராமவதாரம் என்று பெயரிட்டுள்ளார். இப்பெரும் காப்பியத்தில் அறம் மீக்கூர்ந்து காணப்படுவதால் இக்காப்பியத்தை அறக்காப்பியம் என்றும் கூறுவர். அறமெனப்படுவது மானுடர்க்கு மட்டுமின்றிக் குரங்கு இனத்திற்கும் உண்டு என்பதை கம்பன் இக்காப்பியத்தின் வாயிலாகக் காட்டுகின்றார். வாலியாகிய கிட்கிந்தை அரசனை மறைந்திருந்து அம்பு எய்திய இராமனுக்கும் அவனுக்கும் இடையிலான சொற்போரில் இருவருக்குமிடையில் அறம் பற்றிய மாற்றுக் கருத்தாடல்கள் நிலவுவதையும், அவரவர் நிலையில் வாழ்வியலின் தன்மைக்கேற்ப அறக்கோட்பாடுகளில் காணத்தகும் மாற்றங்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கவையா என்பதையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

## ஆய்வுக்களமும் கருதுகோளும்

பாரதத் திருநாட்டின் இருபெரும் இதிகாசங்களில் ஒன்றாகிய கம்பராமாயணத்தில் ஈடு இணையில்லாத வீரனாக விளங்கும் வாலி கிட்கிந்தைக்கு அரசனாகவும், தவம் செய்து பல வரங்களைப் பெற்றவனாகவும் திகழும் பாங்கினை எடுத்துரைக்கக்கூடிய கிட்கிந்தா காண்டத்தின் வாலிவதைப் படலம் மட்டும் இக்கட்டுரையின் ஆய்வுக் களமாக அமைகின்றது.

மானுடச்சட்டை தாங்கி மனிதனாகப் பிறப்பெடுத்துள்ள இராமன் மண்ணுலக அறங்களையும், நீதிகளையும், தர்மங்களையும் உணர்ந்தவன். ஆதலால், அவனது பார்வையில் அறம் பற்றிய கருத்துக்கள் ஒரு நோக்கில் அமைவதையும், குரக்கினங்களின் தலைவனான வாலியின் பார்வையில் அறம் பற்றிய சிந்தனைகள் வேறு நோக்கில் காண முடிகிறது. ஆதலால், "அறத்தின் நாயகனாகிய இராமனுக்கும் குரக்கினமாகிய வாலிக்கும் இடையே புரிதல் அடிப்படையில் அறம், நீதி, தர்மம் ஆகிய கருத்துக்களில் மாறுபாடுகள் இருக்கக் கூடும்" என்ற கருதுகோளின் அடிப்படையில் இக்கட்டுரை அமைகின்றது.

### மறமுடைய வாலி

இராமாவதாரத்தில் மானுடர்களுக்கு இணையாகப் பறவைகளும் விலங்குகளும் கதைப் பாத்திரங்களாக அமைந்திருப்பது ஒரு தனிச்சிறப்பு. விலங்கினத்தைச் சார்ந்தவனானாலும் மனிதர்களைப் போன்ற அரசாட்சி செய்யும் வலிமை படைத்தவனாகிய வாலி, இராமனைத் தவிர யாராலும் வெல்ல முடியாத பெரும் வலிமை உடையவனாகவும் தேவர்களுக்குப் பாற் கடலைக் கடைய உதவியவனாகவும் கம்பராமாயணத்தில் எதிர்மறை கதாபாத்திர மான இராவணனையே வென்ற வீரனாகவும் தன் கண்முன்னே நின்று போரிடுவோர் எவரானாலும் அவர்களின் ஆற்றலைச் சரிபாதி தனக்கு வருமாறு வரம் பெற்றவனாகவும் திகழ்கின்றான். இதனை,

*"கிட்டுவார் பொரக் கிடைக்கின், அன்னவர்*

*பட்ட நல் வலம் பாகம் எய்துவான்;*

*எட்டு மாதிரத்து இறுதி, நாளும் உற்று,*

*அட்ட மூர்த்தி தாள் பணியும் ஆற்றலான்;"*
*(கம்ப., கிட்கிந்த., பா.3825)*

என்று கம்பன் புலப்படுத்துகின்றார்.

### அறம் உடைய சுக்ரீவன் வாலியைப் போருக்கு அழைத்தல்

வாலியின் தம்பியாகிய சுக்ரீவன், அஞ்சனை மகனாகிய அனுமனை அமைச்சராகப் பெற்று ருசிய முகம் எனும் மலையில் தன் அமைச்சர்களோடு அறமுடன் வாழ்ந்தவன். தன் அண்ணனின் ஆட்சி தனக்கு வந்தபோதும் அதை வெறுத்து நின்றவன். அனுமன் மற்றும் பிற அமைச்சர்கள் சேர்ந்து கட்டாயப்படுத்தியதால் கிட்கிந்தைக்கு அரசனானவன். இராமனைப் போலவே தன் மனைவியைப் பிரிந்து வாழ்ந்தவன். இராமனிடம் நட்புறவு ஏற்பட்டு ஆட்சியையும் மனைவியையும் மீட்டவன் என்பதை,

*"உலகம் ஏழினோடு ஏழும் வந்து அவன் உயிர்க்கு உதவி*

*'விலகும் என்னினும், வில்லிடை வாளியின் வீட்டி,*

*தலைமையோடு, நின் தாரமும், உனக்கு இன்று தருவென்;*

*புலமையோய்! அவன் உறைவிடம் காட்டு' என்று புகன்றான்"*

*(கம்ப., கிட்கிந்தா., பா.3855)*

என்றவாறு இராமன் உரைப்பதாக அமைந்துள்ள பாடல் எடுத்துக்காட்டுகிறது.

இராமனின் நட்பும் போர்த் துணையும் கிடைத்தவுடன் சூரியனின் மகனாகிய சுக்ரீவன் வாலியைப் போருக்கு அழைத்தான். அவ்வேளையில் வானுலக தேவர்கள் கலங்கி நின்றதையும் வலிமை வாய்ந்த வாலிக்குப் பயந்து ருசிய முகத்தில் வாழ்ந்துவந்த சுக்ரீவன் வாலியை எதிர்த்து நின்று போருக்கு அழைத்ததை அறிந்த இயற்கை கூடத் தன் நிலை மாறிச் செயல் பட்டதையும், அச்சமயம் அவனுடைய இடத்தோளும் இடக்கண்ணும் துடித்ததையும் கம்பர் குறிப்பிடுகின்றார். இக்கருத்திற்கு அரண்சேர்க்கும் வகையில்,

*'மின்னின் அன்ன புருவமும் விண்ணினைத் துன்னு தோளும், இடம் துடியா நின்றான்' (கம்ப., யுத்த., பா.7348).*

*'செயிரில் தீர்ந்த செழுந்தாமரைக் கண் இடனாடலும் (சிந்தா. 1156)*

*" இடுக்கண் தருதற் கேதுவாகி, இடக்கண் ஆடலும்" (பெருங்கதை. 2-18-32-33)*

என்றவாறு அமைந்துள்ள பிறசான்றாதாரங் களையும் இங்கு சுட்டிக்காட்ட முடியும்.

சுக்ரீவன் வாலியைப் போருக்கு அழைத்த வேளையில் வாலியின் இடது தோளும் இடது கண்ணும் துடித்தது. பொதுவாக ஆண்களுக்கு இடது பக்கம் துடிப்பது ஆபத்து வருவதைக் குறிக்கும் அறிகுறிகளாகும்.

### தாரையின் அரசியல் நுட்ப அறிவு

கம்பன் கண்ட பெண்களில் விலங்கு மகளிராக வருபவள் தாரை. அரசியல் நுட்பங்கள் அறிந்த பெண்ணிவள். வாலி, சுக்ரீவனுடன் போர் செய்யப் புறப்படும் போது தடுத்து விளக்கினாள். தன் கணவனைப் பார்த்து உன்னுடைய வலிமையைக் கண்டு பயந்து சென்றவன் சுக்ரீவன், இப்போது உன்னைப் போருக்கு அழைக்கக் காரணம் ஒரு பெரிய துணையைப் பெற்று வந்துள்ளான் என்று எச்சரித்தாள். அப்பெரிய துணை வேறு யாரும் இல்லை தசரதனின் மகனாகிய இராமன் என்ற வீரன் ஆவான் என்பதையும் தாரை எடுத்துரைக்கும் பாங்கினை,

*அன்னது கேட்டவள், 'அரச!' "ஆயவற்கு*

*இன் உயிர் நட்பு அமைந்து இராமன் என்பவன்,*

*உன் உயிர் கோடலுக்கு உடன் வந்தான்" எனத்*

*துன்னிய அன்பினர் சொல்லினார்' என்றாள். (கம்ப., கிட்கிந்தா., பா.3964)*

என்ற பாடலின்வழி உணரமுடிகின்றது,

## வாலியின் மறுப்பும் போருக்குச் செல்லுதலும்

தாரை உரைத்ததைக் கேட்ட வாலி அவள் உரைக்கு மறுப்பு தெரிவிக்கின்றான். இராமன் தர்மத்தின் வழியில் மட்டுமே எக்காலத்திற்கும் நடந்துகாட்டியவன். இம்மை மறுமை எனும் இரண்டின் பயன்களையும் பார்ப்பவன். தன் தந்தை ஆண்டு வந்த அயோத்தி ஆட்சியைத் தன் தம்பிக்குக் கொடுத்து விட்டுக் கானகம் வந்தவன். இத்தகைய உன்னதம் கொண்ட இராமன் அற்பச் செயலுடைய ஒரு குரங்கினனான சுக்ரீவனோடு நட்புறவு கொள்ள மாட்டான் என்றான்.

மேலும் தன் தம்பிகளின் மேல் அதிக அன்பு கொண்ட இராமன் எனக்கும் என் தம்பிக்கும் இடையே நடக்கும் போரில் இடையில் வந்து என் மீது அம்பு தொடுக்கமாட்டான் என்று நம்பிக்கை கொள்கின்றான் வாலி என்பதை,

**“தம்பியர் அல்லது தனக்கு வேறு உயிர்**

**இம்பரின் இலது என எண்ணி ஏய்ந்தவன்,**

**எம்பியும் யானும் உற்று எதிர்ந்த போரினில்**

**அம்பு இடை தொடுக்குமோ, அருளின் ஆழியான்”?** (கம்ப., கிட்கிந்த., பா.3969)

என்ற பாடல் தெளிவாக்குகின்றது.

வாலியும் சுக்ரீவனும் வலிமை மிக்க யானைகள் இரண்டும் ஒன்றோடு ஒன்று மோதிக்கொள்வது போல் ஒருவரோடு ஒருவர் மோதிப் போர் புரிந்தனர். மலை யோடு மலை மோதுவது போலவும், வலிமைமிக்க ஆண் சிங்கங்கள் ஒன்றோடு ஒன்று மோதுவது போலவும், வானுலகில் கோள்களோடு கோள்கள் மோதிக் கொள்வது போலவும் இருவரும் நெருக்கிப் போரிட்டனர். அப்போது அவர்கள் திலோத்தமைக்காக சுந்தன் உபசுந்தன் என்ற பழைய அசுரர்கள் இருவரும் மோதிக் கொண்டவர்களைப் போலக் காட்சியளித்தனர். அதைக் கண்ட வானுலக தேவர்கள் பாதுகாப்பான இடத்தைத் தேடினர். வாலி சுக்ரீவன் இருவரும் ஒருவரை ஒருவர் கடித்தபடியும் குத்திய படியும் சண்டையிட்ட பொழுது இருவரும் வானத் தில் சண்டையிடுகிறார்களா? சிகரத்தில் சண்டையிடுகிறார்களா? நிலவுலகத்தில் உள்ளனரா? யாரேனும் கண்களில் உள்ளனரா? என்று எங்கும் திரிந்து நின்றவர்களாய் சண்டையிட்டுக் கொண்டா ர்கள் என்றும் அவ்விருவரும் ஆராவரித்து எழுப்பிய பேரொளி கடல் உள்வாங்கும் பேரொளியைப் போலவும், ஒருவரை ஒருவர் குத்திக் கொண்ட போது அவ்வோசை இடிமுழக்கம் போலவும் இருந்தது என்றும் இருவரும் ஒருவர் மேல் ஒருவர் பாய்ந்து தன் கொடிய பற்களால் ஒருவரை ஒருவர் கடித்ததால் இரத்தம் எல்லா இடங்களிலும் தெறித்தது என்றும் வானில் உள்ள நட்சத்திரங்களும் மேகங்களும் செவ்வாய் கோவைகளைப் போல சிவந்த நிறமானது என்றும் காப்பியம் உரைக்கின்றது.

தம் வாலினாலும் காலினாலும் தம் கூர்மையான நகங்களாலும் ஒருவரை ஒருவர் தாக்கிய போது ஏற்பட்ட காயம் மலையில் உள்ள குகைகள் போல ஆழமாக துளைத்துக் காணப்பட்டது. இவ்வாறு வலிமையோடு இருவரும் போர் செய்யும் வேளையில் பெரிய திரண்ட தோள்களையுடைய வாலி பெரிய யானையைச் சிங்கங்கள் அழிப்பது போலத் தன் தம்பியான சுக்ரீவனின் வலிமையை தளர்ந்து விழும்படி செய்தான். அப்போது தளர்வுற்ற சுக்ரீவன் இராமனிடம் வந்து வாட்டம் உற்றவனாய் பணிந்து நின்றான். வாலியும் சுக்ரீவனும் இருவரும் ஒரே மாதிரியாகத் தோற்றமளிப்பதால் இராமனுக்கு அடையாளம் தெரியாமல் போனதால், சுக்ரீவனைப் பார்த்து நீ கொடி பூவைச் சூடி செல்வாய் என்று கூறி மீண்டும் போருக்கு அனுப்பினான்.

## இராமன் மறைந்திருந்து அம்பெய்தல்

மீண்டும் ஏற்பட்ட தாக்குதலில் வாலி சுக்ரீவனைத் தரையில் அடிப்பேன் என்று கூறி, சுக்ரீவனின் இடையில் ஒரு கையையும் கழுத்தில் ஒரு கையையும் வைத்துத் தலைக்குமேலே தூக்கினான். அப்பொழுது இராமன் வாலியின் மேல் அம்பு தொடுத்தான். இதனை,

**“எடுத்துப் பாரிடை எற்றுவென், பற்றி' என்று, இளவல்**

**கடித்தலத்தினும், கழுத்தினும், தன் இரு கரங்கள்**

**மடுத்து, மீக் கொண்ட வாலிமேல், கோல் ஒன்று வாங்கி,**

**தொடுத்து, நாணொடு தோள் உறுத்து, இராகவன் துரந்தான்”**

(கம்ப., கிட்கிந்தா., பா.3999)

என்று கம்பன் பாடுகின்றார். வலிமையான வாலியின் மார்பில் வாழைப்பழத்தில் ஊசி நுழைவதுபோல இராமன் அம்பு பாய்ந்து

நின்றது என்றும் அப்போது தம்பியின் மீது இரக்கமற்ற வாலி ஊழிக்காலத்தில் பெருங் காற்று வீசி மேருமலையை வேரோடு பறித்து எறிவது போல நிலத்தில் வீழ்ந்தான் என்றும் பாடல் உணர்த்துகின்றது.

பேரிடி விழுந்தபோது மலை அடியோடு நிலை குலைந்து போவது போல வலிமை வாய்ந்த வாலி வலிமையற்று விழுந்தான். நிலத்தில் சாய்ந்த வாலி இப்பூமியையும் பூமியில் உள்ள உயிர்களையும் அழிப்பேன் என்று சினத்துடன் கூறி எழுந்து நின்றான். தன் மார்பின் மீது இராமன் தொடுத்த அம்பினை தன் இரண்டு கைகளால் பிடித்துக் கொண்டு அதை வெளியில் எடுக்க முடியாமலும் வலி தாங்க முடியாமலும் நிலத்தில் புரண்டான். இந்த அம்பினை எய்தவர்கள் தேவர்களோ? திருமாலின் சுதர்சனமோ? சிவனின் சூலாயுதமோ? முருகனின் வேலாயுதமோ? இந்திரனின் வஜ்ராயுதமோ? இல்லை முனிவர்கள் இதனை ஏவினார்களோ? என்று கலங்கி நின்றான். மேலும் அந்த அம்பினை கொடுத்தவர்கள் யார்ரென்று தெரிந்து கொள்ள முற்பட்டான்.

ஆண் சிங்கம் போலிருந்த வாலி அவன் மார்பில் இருந்து அம்பைப் பிடுங்கிய போது காற்றாற்று வெள்ளம் போல இரத்தம் வெளியில் பீறிட்டது. இந்த நிலையில் வாலி இருந்த நிலையைப்பார்த்த சுக்ரீவன் அண்ணன் மீது கொண்ட அன்பினால் கண்ணீருடன் நிலத்தில் வீழ்ந்தான். அப்போது வாலி அந்த அம்பில் இராமனுடைய திருநாமத்தைக் கண்டதை,

**மும்மை சால் உலகுக்கு எல்லாம் மூல மந்திரத்தை,முற்றும்**

**தம்மையே தமர்க்கு நல்கும் தனிப் பெரும் பதத்தை,தானே**

**இம்மையே, எழுமை நோய்க்கும் மருந்தினை, 'இராமன்' என்னும்**

**செம்மை சேர் நாமம்தன்னைக் கண்களின் தெரியக் கண்டான்.**

**(கம்ப., கிட்கிந்த., பா. 4013)**

என்ற பாடல் உணர்த்துகின்றது.

இக்கருத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் நோவினையும் நோயினையும் நோய்செய் வினையினையும், வினையினையும் தீர்த் தருளும் வேங்கடமே (திரு வேங்கடமாலை - 14)

**'எல்லீரும் அவ்இராம நாமமே சொல்லீர்'** (கம்ப., கிட்கிந்த., பா.4695)

ஆகிய பாடல்கள் அமைந்துள்ளமை இங்கு குறிப்பிடற்குரியது.

## இராமனை வாலி இகழ்தல்

இல்வாழ்க்கையைத் துறந்து விட்டுக் காட்டிற்கு வந்தவனான இராமன் குரங்கின த்திற்காகத் தங்களது மரபுக்குரிய விற்போரின் தர்மத்தை இப்போது துறந்து விட்டான் என்றும் இதுவா தருமம் என்றும் வாலி இகழ்கின்றான். இதனை,

**"இல்லறம் துறந்த நம்பி, எம்மனோர்க்காகத் தங்கள்**

**வில் அறம் துறந்த வீரன் தோன்றலால், வேத நல் நூல்**

**சொல் அறம் துறந்திலாத சூரியன் மரபும், தொல்லை**

**நல் அறம் துறந்தது' என்னா, நகை வர நாண் உட்கொண்டான்"**

*(கம்ப., கிட்கிந்தா., பா.4014)*

என்று கம்பர் பாடுகின்றார்.

இராமன் நீதிமுறையைத் தவறவிட்டான் என்று வாலி இராமனை இகழும் பொழுது அவன் முன் இராமன் தோன்றினான். அப்போது வாலி கடும் சினத்துடன், அறத்துடன் வாழ்ந்த தசரதனது மகனாகிய இராமானே உன்னால் உன் குலப்பெருமை கெட்டுப் போனது என்றும், மற்றவர்கள் தீமை செய்தால் அதைத் தீமை எனத்தடுப்பது அறம். அதுவே நீ செய்தால் அது அறம் ஆகிவிடுமா என்றும்,

உன் குலமாகிய சூரிய குலமோ மிகப் பெரியது, உனக்குக் கல்வி கற்றுக் கொடுத்தவர்களோ வசிட்டரும் விசுவாமித் திரரும் இவ்வாறு சிறப்புடைய நீ இத்தகைய செயலைச் செய்யலாமா? என்றும் அரசர் களுக்குரிய அறநெறியானது உன் குலத்தில் பிறந்த எல்லோருக்கும் உரியதாகும் என்றும் அரக்கனான இராவணன் உனக்குத் தீங்கு செய்து விட்டால் அதற்காக அரக்கரினும் வேறுபட்ட குரங்கினத்தை சார்ந்த அரசனைக் கொள்வது மனுதர்மமாகாது என்றும் பலவாறு வசைமொழி பகன்றான்.

உனக்குரிய கருணை எனும் பண்பினை எவ்விடத்தும் சிந்திவிட்டாய் என்றும், என்னிடத்தில் என்ன குறை கண்டாய்? எதற்காக இந்த காரியத்தைச் செய்தாய்? என்றும் இராமனை எதிர்த்துக் கேள்வி கேட்டு இகழ்ந்தான்.

இராமன் குலத்தின் முன்னோர்களில் ஒருவனான சிபி மன்னன் புறாவிற்காகத்

தன்உடலையே அரிந்து கொடுத்தவன். திலிபன் என்பவன் பசுவிற்காகத் தன்னையே சிங்கத்திற்கு உணவாகக் கொடுத்தவன். இவ்வாறு இரக்கப் பண்பு கொண்டவர்கள் பரம்பரையில் வந்த இராமன் இத்தகைய செயலை செய்ததன் காரணம் என்னவோ? என்று கேட்டான் வாலி.

கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தில் குரங்குகளுக்கு மட்டும் கலியுலகம் வந்து விட்டதா? நல்லொழுக்கம் குறைந்து போய்விட்டதா? அயோத்தியில் தனக்குரிய அரசைத் தன் தம்பிக்குக் கொடுத்து ஒப்பற்ற காரியத்தைச் செய்த இராமன் காட்டில் அதற்கு மாறான செயலைச் செய்ததன் காரணம் என்னவென்று தெரியாமல் நின்றான் வாலி. போர்க்களத்தில் அறத்துடன் போரிடுபவரே வீரர்கள், அவ்வாறு வீரர் எனப் போற்றப்படும் இராமன் செய்துள்ள இச்செயல் அறத்திற்கு மாறான செயல் என்று வாலி உரைத்தான்.

ஒருவருக்கொருவர் சண்டையிட்டுப் போர் செய்யும் பொழுது மூன்றாவது நபர் மறைந்திருந்து அம்பு செலுத்துதல் அறம் ஆகுமா? இச்செயல் தகுதி இல்லாதவர் களுக்குரியது. இராமன் செய்தது வீரமான செயல் இல்லை என்றும், அறச்செயலும் இல்லை என்றும், இது உண்மையும் இல்லை என்றும், இந்த உலகிற்கு நன்மையும் இல்லை என்றும், இராமனுக்கு நான் எதிரியும் இல்லை என்று, இரக்கமற்ற இந்த காரியத்தை இராமான் செய்தது தவறு என்றும் தன் வாதத்தைவை தொடர்ந்தான் வாலி.

இருபக்கம் உள்ள நியாயத்தை எண்ணிப் பார்த்து நடுநிலையில் தீர்ப்புச் சொல்வது தானே சிறந்த அறம். சுக்ரீவனுடைய பக்கம் நியாயம் இருக்கிறது என்று அவனுக்கு உதவி புரிதல் என்பது என்ன நியாயம்? யானையைப் போன்ற வலிமையுடைய இராவணனை அழிக்க சிங்கம் போன்ற தன்னை இராமன் கைகூட்டிக்கொள்ளாமல் முயலைப் போன்ற சுக்ரீவனை சேர்த்துக் கொண்டால் யானையாகிய இராவணனைப் பிடிக்க முடியுமா? என்று கேட்டான்.

வானில் உள்ள சந்திரனுக்கு கலங்கம் இருப்பது போல சூரிய குலத்திற்கு ஒரு கலங்கத்தை இராமன் ஏற்படுத்தி விட்டான் என்றும், இராமனுக்கு அயலவனாகிய சுக்ரீவன் வாலியைப் போருக்கு அழைத்தான். இருவருக்கும் சண்டை நடக்கையில் இராமன் மறைந்திருந்து அம்பு போட்டதால் வாலி, வஞ்சித்து கொலை செய்தவன் நீ, நாணமின்றி என் முன் நீ நிற்கலாமா? என்றெல்லாம் கடும் கோபத்துடன் இகழ்கின்றான். மேலும் வாலி இராமனிடம் நீ என்னை அழிக்கவில்லை அற நூல்கள் கூறும் விதிமுறைகளையும் சூரியகுலத்தின் முன்னோர்களின் கட்டிக்காத்த அற இயல்புகளையும் அவர்களின் நல்லொழுக் க த்தையும் அழித்து விட்டாய் என்றும் இகழ்ந்தான். அதுமட்டுமின்றி வாலி, சீதையைக் கவர்ந்து சென்ற இராவணன் மேல் அம்பு விட்டுக் கொல்லாமல், மறைந்திருந்து ஆயுதம் இல்லாதவனான என் மார்பில் அம்பை எய்தது சரியா என்று கடும் சினத்துடன் பற்கள் பொடியாகும்படி கண்களின் வழியாகத் தீப்பொறி சிதற நியாயம் கேட்டான் வாலி.

## இராமனின் மறுமொழிகள்

வாலி தன்னை இழந்ததைக் கேட்ட இராமன் அவனுக்குத் தான் செய்த செயல் தவறில்லை என உணர்த்த முற்படுகின்றான். மாயாவி என்ற அரக்கனைக் கொள்வதற் காகப் பாதாள குகைக்குள் சென்ற நீ நெடுங்காலமாக வராததால் குற்றமற்ற உன் தம்பியாகிய சுக்ரீவனை, அறிவால் சிறந்த பெரியோர்கள் கிட்கிந்தை அரசாட்சியில் அமரச் சொன்னார்கள். அதைக்கேட்ட சுக்ரீவனும் தன் அண்ணனைக் கொன்ற மாயாவியைக் கொன்று, அண்ணன் இல்லாத இந்த உலகத்தில் தானும் இறப்பேன் என்றும் கூறியவன் உன் தம்பி சுக்ரீவன்.

போராற்றலுடையவர்களாகிய வீரர்களும் அரசியல் நெறிமுறைகளை முழுவதும் உணர்ந்த அமைச்சர் போன்ற அனுபவம் மிக்கவர்களும் பெரியவர்களும் கூறிய கூற்றின்படி, குற்றமற்ற இந்த சுக்ரீவன் கிட்கிந்தை இராஜ்ஜியத்தில் மணிமுடி சூட்டிக்கொண்டான். மாயாவியைக் கொன்றுவிட்டுத் திரும்பி வந்த உன்னை வணங்கிப் என்னுடைய தந்தையே என்று உன்னைப் பணிந்தவன் மேல் கடும் சினமுற்றாய். சுக்ரீவன் மேல் எந்தக் குற்றமும் இல்லை என்பதை உணர்ந்த பின்னரும், அவன் மேல்இரக்கம் காட்டாமல் அவனைக் கொல்லத் துடித்தாய். உன்னிடத்தில் அடைக்கலமாக வந்தவனை ஏற்றுக் கொள்ளாமல் சினம் காட்டினாய் இது அறமாகுமா?

சுக்ரீவன் வலிமையுடையவன் ஆனாலும் தானே தோற்றுவிட்டதாக மன்னிப்பு கேட்டு, நான்கு திசைகளிலும் ஓடினான். தம்பியின் மீது இரக்கம் இல்லாமல் அவனைக்

கொல்லச் சென்றாய். பிறகு ருசிய முகம் என்ற மலையில் சென்று சேர்ந்தான். மதங்க முனிவர் உனக்கு இட்ட சாபத்தால் அங்கு உன்னால் செல்ல முடியவில்லை.

அன்பின் செயல் உடையவனும் நல்ல குலத்தில் பிறந்தவனும் வீரத்தன்மையுடையவனும் கல்வியில் சிறந்தவனும் பிறன் மனை விரும்புவது பெருங்குற்றம் என்று இராமன் கூறுகின்றார். இதனை,

**"ஈரம் ஆவதும், இற் பிறப்பு ஆவதும்,**

**வீரம் ஆவதும், கல்வியின் மெய்ந் நெறி,**

**வாரம் ஆவதும்,மற்று ஒருவன் புணர்**

**தாரம் ஆவதைத் தாங்கும் தருக்கு அதோ?"**

(கம்ப., கிட்கிந்தா., பா.4041)

என்று கம்பர் புலப்படுத்துகின்றார் .

எளியவர் மீது வலியவர் சினம் கொள்ளாமல் இருப்பதலே உண்மையான வீரமாகும் என்றும் கற்புடைய பெண்களின் தூய கற்பு நிலை திரியும் வகையில் நடந்து கொள்வது அறமாகாது என்றும் வீரத்திற்கு இலக்கணமாக வாலியின் போர் முறை அமையாதது அறத்திற்கு உட்பட்டது அன்று என்றும் அடுக்கடுக்காக அறங்கடந்த காரியங்களைச் செய்த அவனது செயல் கண்டிக்கத் தக்கது என்றும் இராமன் வலிமையாக எடுத்துக் கூறினான். இக்கருத்திற்கு நாலடியாரில்

**"அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்**

**பிறன்தாரம் நச்சுவார்ச் சேரா பிறன்தாரம்**

**நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்**

**றச்சத்தோ டிந்நாற் பொருள்"** (நாலடி.,82)

என்ற பாடலும்,

**"பகைபாவம் அச்சம் பழியென நான்கும்**

**இகவாவாம் இல்லிறப்பான் கண்"** (குறள்.,146)

என்ற குறளும் துணையாக நின்று வழிகாட்டுகின்றன.

வலிமையுடைய ஒருவன் அதற்கு மாறான வழியில் செல்வது தவறாகும். கற்புடைய மகளிர் இடம் கற்பிற்கு மாறாக நடப்பது அறமன்று என்கின்றான் இராமன். மேலும் அறம் எது என்பதை மறந்தாய். தம்பியின் மனைவியை உனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளும் செயல் உனக்குப் பெருமை சேர்க்குமா?நீ இவ்வாறான கொடுஞ் செயல்களைச் செய்தாய் அதனால் தான் என் நண்பனாகிய சுக்ரீவனுக்காக நான் இதைச் செய்தேன். உன் செயல்கள் அறமற்றது என்றெல்லாம் இராமன் மறுமொழி கூறினான்.

### வாலியின் எதிர்வாதம்

இராமன், வாலி செய்த தவறுகளைச் சுட்டிக்காட்ட வாலியோ இராமன் கூறிய நீதிகள் வானரங்களுக்குப் பொருந்தாது என்றும், விரும்பியவாறு வாழ்வது எங்கள் உரிமை என்றும் கூறி தன் குற்றங்களை மறுத்தான். கற்பென்பது மானுடருக்கு உரியது, அது விலங்குகளுக்கன்று என்பதை தாமரையில் வீன்றிருக்கும் நான்முகன் எங்களைப் படைக்கும் பொழுது அப்படி நியமிக்கவில்லை என்றும், வேத நெறிப்படி செய்யும் திருமண முறைகளும் நற்பண்புகளும் மானுடர் ஆகிய உங்களுக்கு உரியது வானரங்களான எமக்கு அது இல்லை என்றும் எதிர்வாதம் செய்தான் வாலி.

### இராமனின் மறுப்பும் வாலியின் மனமாற்றமும்

இராமன் வாலியை நோக்கி நன்மை உடைய தேவர்கள் போல அறத்தின் நல்வழியை அறிந்துள்ள நீங்கள் விலங்கினங்கள் அல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது என்றுரைத்து, அறநெறிகளையும் அதன் இயல்பினையும் செம்மையாக உணர்ந்த வாலியே, தவறுகள் செய்துவிட்டு என் செயல் பிழை அன்று சரியானது என்று கூறுவது அறமாகாது நல்ல அறநெறியுடன் இருக்கும் சடாயு சீதையின் துன்பத்தை நீக்குதல் பொருட்டு உயிரிழந்து மோட்ச உலகை அடைந்தார். அவரும் கழுகுகளுக்கு அரசனாவார். நிலைபெற்ற நல் அறநெறிகளில் நீ கூறிய எதுவும் நல்லறங்கள் இல்லை.

மனுதர்மம் வகுத்த நன்னெறியில் நடக்கும் விலங்குகள் தேவர்களுக்கு ஒப்பானவையே. தீமை குணமுடையவர்களும் சில நேரத்தில் அறவழியில் செல்கின்றனர். மிகுந்த நன்மை குணம் உடையவர்களும் சில நேரத்தில் அறத்திற்கு மாறான செயல்களைச் செய்கின்றனர். அவரவர் செய்யும் செயல்களால் அவரவருக்கு விதிப் பயன் அமையும் என்பதை நீ உணர்ந்து இருந்தும், மற்றவனின் மனைவியின் கற்பு மாண்பினை அழித்தாய் என்று உரைத்தான் இராமன்.

இராமன்மீது கொண்ட மதிப்பால், கீழே விழுந்து இராமனை வணங்க முடியாத நிலையில் தலையால் வணங்கினான். வாலி இராமனுடைய குணச்சிறப்புகளை முன்னரே ஒருவாறு அறிந்திருந்தாலும் தான் என்ற செருக்காலும், தன்னலத்தாலும்

மறைக்கப்பட்டு இராமனை இழித்துரைத் தான். பின் இராமன் கூறிய மொழிகளால் அவனது அஞ்ஞானம் நீங்க நல்லறிவு பெற்றான் எனலாம்.

இவ்விடத்தில் ஒருவன் எவ்வளவு அறிவுடை யவனாக இருந்தாலும் ஞானாசிரியரின் உபதேசம் பெற்றால் மட்டுமே உண்மையான ஞானம் கிட்டும் என்ற கருத்து வலியுறுத்தப் பட்டுள்ளது. மனமாற்றத்தை சிறிது சிறிதாகப் பெற்றுக்கொண்டே வாலி ஒரு நிலையில். இராமனின் அருட்பேராற்றலை உணர்ந்து கொண்ட தன்மையை,

**ஏவு கூர் வாளியால் எய்து, நாய் அடியனேன்**

**ஆவி போம் வேலைவாய், அறிவு தந்து அருளினாய்;**

**மூவர் நீ! முதல்வன் நீ! முற்றும் நீ! மற்றும் நீ!**

**பாவம் நீ! தருமம் நீ! பகையும் நீ! உறவும் நீ!**
(கம்ப., கிட்கிந்த., பா. 4063)

என்ற பாடலின் மூலமாக அறியலாகின்றது. அவ்வேளையில் இராமனின் மறுப்புரையைக் கேட்ட வாலி, இராமன் அறநெறி அழியுமாறு செயல்களைச் செய்ய மாட்டான் என்றும், அறமும், நடுநிலைமையும், நற்குணமும் இராமனே என்றும் தான் செய்த தீமைகளைப் பொறுத்தருளுக என்றும் இராமனிடம் பணிந்து நின்றான். நல்லது தீயது எதுவென்று தெரியாத தன்னை, நாய் போன்ற கடைப்பட்டவனாகிய பொறுத் தருள்க என்று இராமனை வேண்டி நின்றான். உன்னைப்பற்றி சொன்ன தீய சொற்களை மனதிலிருந்து நீக்கிவிடு என்று தன் தீயமனதை மாற்றினான் தலைவன் வாலி.

## தொகுப்புரை

கம்பராமாயணக் காப்பியத்தைப் பொறுத்த வரை காப்பிய மாந்தர்கள் மனிதர்களாகவும், விலங்குகளாகவும், பறவைகளாகவும் அரக்கர் களாகவும் பிறப்பின் தன்மையில் மாறுபட்டு பிறந்திருந்தாலும் கூட அனைத்துப் பிறப்புக் களும் உயர்நீதிகளை உணர்த்தும் தன்மையு டையன என்பதையும் அந்நெறிகளில் இருந்து சற்றேனும் வழுவாமல் வாழ்ந்து காட்டியவர் கள் என்பதையும் கம்பர் கதைப்போக்கில் உணர்த்திச் செல்கின்றார்.

பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை என்ற உன்னத கொள்கையில் பிடிப்புடைய கம்பன், மானுடருக்கு என்று வகுக்கப்பட்டுள்ள அறங்கள் அனைத்தும் விலங்குகளுக்கும், பறவைகளுக்கும், அரக்கர்களுக்கும் பொருந்தக்கூடியவை தான் என்பதை வலிமையாகப் பதிவு செய்துள்ளார்.

அறத்தையும், நீதியையும், தர்மத்தையும் ஒரு சேர கடைப்பிடித்து வாழக்கூடியவர்கள் விலங்குகளாகவோ, பறவைகளாகவோ, அரக்கர்களாகவோ இருந்தாலும் கூட அவர் கள் உயர்திணை உயிர்களாகிய மனிதர்களா கவே மதிக்கப்படுவார்கள் என்ற கருத்தை வலியுறுத்திச் செல்லும் காப்பிய புலவன், அந்நெறிகளைப் புறந்தள்ளும் பாத்திரங்கள் எப்பிறப்பாக இருந்தாலும், குற்றம் உடையவை என்ற கருத்தை பல்வேறு இடங்களில் வலியுறுத்தி செல்கின்றார்.

## துணைநின்ற நூல்கள்

1. சீவக சிந்தாமணி - திருத்தக்கதேவர் - சென்னை: சைவ சித்தாந்த மகா சமாஜம், 1941
2. திருவேங்கடமாலை - பிள்ளைப் பெருமாளையங்கார் - விவேகவிளக்க அச்சுக்கூடம்
3. பெருங்கதையின் - கொங்குவேளிர் - சென்னை: கேசரி அச்சுக்கூடம். 1935
4. நாலடியார் - சமண முனிவர்கள் - தெளிவுரை-சாரதா பதிப்பகம்-சென்னை -600 014.
5. திருக்குறள் - பரிமேலகழகர் உரை - சாரதா பதிப்பகம் - இராப்பேட்டை - சென்னை - 600 014 முதற்பதிப்பு - 2002
6. கம்பராமாயணம் - இராமவதாரம் - கிட்கிந்தா காண்டம் - கம்பன் அறநிலை- நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., டிசம்பர் 2012.